REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 12உ செவ்வாய் (27—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 13உ புதன் (28—12—55) [இதழ் 167

'காந்தியார் சிலை அமைக்க மாவட்ட அதிகாரியின் அனுமதி பெற வேண்டும்'

காந்தியார் சிலை அமைப்பது குறித்து சென்னை சர்க்கார் புது உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கிறார்கள்.

தொடர்புடைய மாவட்ட அதிகாரியின் முன் அனுமதியின்றி உள்ளாட்சிக் கழகங்கள் காந்தி சிலை அமைப்பது கூடாது என்றும் மாவட்ட அதிகாரிகள் அனுமதி வழங்குமுன் அமைக்கப்படும் சிலையைப் பார்வையிடவேண்டும் என்றும் உத்தரவு கூறுகிறது.

சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ள காந்தியார் சிலைகள் தரக்குறைவாக அமைந்திருப்பதே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

'இந்தியை கட்டாயமாகத் திணிக்கக்கூடாது'

இந்தி எதிர்ப்பு அபத்தமானதாம்!

இந்தி அலுவல் மொழிமட்டும்தானும்!

கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாதாம்!

பண்டித நேருவின் வழக்கமான உபதேசம்

"மொழி பற்றி எழுந்துள்ள சிக்கலைப் போல வேறெதுவும் எனக்கு ஆச்சரியமளிக்கவில்லை; இது ஒரு அற்பத்தனமான சிக்கலாகும்; இந்தியாவின் எல்லாப் பெரிய மொழிகளையும் நமது அரசியல் சட்டத்தில் அங்கீகரித்துவிட்டோம். அந்த மொழிகள் வளரவும் முன்னேறவும் நாம் ஆதரவு காட்டவேண்டியது மிக அவசியமானதாகும்.

"இந்தி இந்தியாவின் அலுவல் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதற்குக் காரணம், அது பெரும் அளவு பரவி இருப்பதேயாகும். இதனால், இதர பெரும் மொழிகள் இந்தியுடன் மோதிக்கொள்ள வேண்டும் என்பதல்ல.

"சில இந்தி வெறியர்கள், பிறரைத் தாக்கும் வகையில் பேசுவது துரதிருஷ்ட வசமானதே! இவர்களுக்கு, இதர மொழிகள் பெற வேண்டிய உயர்ந்த நிலை பற்றித் தெரியாது; அதே போல தென்னாட்டில் சிலர், 'இந்தி ஏகாதிபத்தியம்' என்றெல்லாம் பேசுகின்றனர்; இவை சுத்த அபத்தமானவை.

"உண்மை என்னவென்றால், நாம் எல்லா மொழிகளையும் அபிவிருத்தி செய்தாக வேண்டும். இலக்கியம் ஒவ்வொரு மொழியையும் பிறமொழியுடன் ஒன்று சேர்க்கும்—இணைக்கும்; அப்படித்தான் இணையவேண்டுமேயல்லாது—மொழி பெயர்ப்பு போன்றவைகளால்தான் ஒவ்வொரு மொழியும் பிறமொழியுடன் தொடர்பு கொள்ள வேண்டுமேயல்லாது, கட்டாயமாகத் திணிப்பதின் மூலமாக அல்ல; ஒவ்வொரு மொழியும் எப்படி இருக்கவேண்டுமோ அப்படி தனது தனித்தன்மையுடன் விளங்கும்; ஆனால், இதர மொழிகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டதாய், இதர மொழியிடமிருந்து ஊக்கம் பெறுவதாய் அமையும். ஏனெனில், அதன் நோக்கம் விரிவானதாயிருக்கலாம் என்பதற்காக!

"இதர வெளிநாட்டு மொழிகளை அறிந்துகொள்ளுவதின் மூலமும் நாம் நமது நோக்கத்தை—கண்ணோட்டத்தை விரிவாக்கிக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய மொழிகளை மட்டும் கற்றுக் கொள்ளுவதுடன் நின்றுவிட்டு வெளிநாட்டு மொழிகளை மறந்து விட்டால், நான் அஞ்சுகிறேன்—இந்தியா ஒரு இரண்டாந்தரமான நாடாகிவிடக்கூடும். நம்மைச் சுற்றி நாம் சுவர் எழுப்பிக்கொண்டால், நமது முன்னேற்றம் தடைப்படும். நாம வெளிநாட்டு மொழிகளையும் கற்கவேண்டும்; ஆனால், நாம் சிந்திப்பதும், வேலை செய்வதும் பொதுவாக, நமது சொந்த மொழியிலேயே இருக்கவேண்டும். இந்த இரண்டும் முரண்பாடுடையன அல்ல"

—என்று, பண்டித நேரு செருத்துருத்தி எனும் இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் உபதேசம் வழங்கியிருக்கிறார்.

அவர் ஆசைக்குக் காரணம்!

"நான் தென்னாட்டிற்கு வருவதற்கு மிகப் பிரியப்படுகிறேன்; ஏனெனில், இங்கு இயற்கைக் காட்சிகள் வெகு அழகாயிருக்கின்றன; மனிதர்களெல்லோரும் புத்திசாலிகளாயும், அறிவாளிகளாயுமிருக்கிறார்கள்; பெண்களெல்லோரும அழகு மிக்கவர்களாக இருக்கிறார்கள்."

—பாலக்காடு பொதுக்கூட்டத்தில் பண்டித நேரு

'ஆனால் பணிவாக பரப்ப வேண்டும்'

ஆச்சாரியா நரேந்திரர் உபதேசம்

கயா, டிச. 26—

"இந்தி தேசீய மொழியாக்கப்பட்டதற்குக் காரணம், அது, இதர இந்திய மொழிகளைவிட இலக்கிய வளம் மிக்கது என்பதாலோ, அல்லது எல்லாவற்றையும் விட உயர்ந்த கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறது என்பதாலோ அல்ல; மாறாக, இதர மொழிகள் வழங்கும் பகுதிகளைவிட இந்தி வழங்கும் பகுதி அதிகமாக இருக்கிறது என்பதினால்தான்.

"எனவே, இந்தி வெறியர்கள், தங்களது சிந்தனை அற்ற பேச்சுக்களினால், இதர மொழி வழங்கும் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தக்கூடாது. இன்று இந்தியை ஏற்க மறுப்பவர்களை, இந்தியைக் கட்டாயமாக ஏற்குமாறு திணிக்கக்கூடாது. இந்தி பரப்பும் வேலையை மிகப் பணிவாக மேற்கொள்ள வேண்டும். ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்தைக் கக்குவதினால் அல்ல—மாறாக, மிக அமைதியான வழிகள் மூலமே இந்தியைப் பரப்ப முடியும்,"

என்று, கயாவில் நடைபெற்ற ம. சோ. கட்சி மாநாட்டில் பேசுகையில், ஆச்சாரியா நரேந்திர தேவ் எச்சரிக்கை விடுத்துப் பேசியிருக்கிறார்.

பண்டித நேருவின் புலம்பல்

இந்தியா ஒரே நாடுதானும்!

மாநிலப் பிரிவினை நிர்வாகவசதிக்கு மட்டுமாம்!

பண்டிதரின் வஞ்சகம் நிறைந்த பழைய பல்லவி

"மாநிலங்கள் புனரமைப்புக் குறித்த இறுதி முடிவுகள் எப்படியிருந்த போதிலும் மக்கள் அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை.

"தங்களுடைய மாநில எல்லை எங்கு அமைகிறது என்பது அவ்வளவு முக்கியமானதல்ல. ஏனெனில், எப்படி இருப்பினும் எல்லோரும் இந்தியாவிற்குள் இருக்க வேண்டியவர்கள்—ஒன்றுக வேலை செய்ய வேண்டியவர்கள்.

"சுதந்திரத்திற்காகப் போராடியபோது, தென்னாட்டிற்கு அல்லது வடநாட்டிற்கு என்று பிரித்து நாம் போராடவில்லை; மொத்தமாக, இந்தியாவிற்கென்றே போராடினோம்; பெற்ற சுதந்திரமும் இந்தியா முழுமைக்கும்—மக்கள் எல்லோருக்குமாகத்தான்.

"இந்தியா முழுமைக்கும் என்றுதான், நாம் ஐந்தாண்டுத் திட்டங்கள் முதலியனவற்றைத் தீட்டிக்கொண்டு வருகிறோம். எனவே, நமது வேலையெல்லாம் இந்தியா முழுமைக்குமே தவிர, இந்தப் பகுதி அல்லது அந்தப் பகுதிக்காக என்பதல்ல என்பதை மறந்துவிடக் கூடாது.

"இந்தியா என்பது பல அங்கங்கள் கொண்ட ஒரு ஒன்றுபட்டப் பகுதியாகும். வசதியான நல்ல நிர்வாகத்திற்காகத்தான் இந்தியா பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

"இந்தியாவில் ஏதேனும் ஒரு பாகத்தில், ஏதேனும் சம்பவங்கள் நடைபெற்றால் இந்தியாவின் இதர பகுதிகளையும் அது பாதிக்கின்றன. அண்மையில் தென்னாடு புயலால் பாதிக்கப்பட்டது; அதனால் துன்பங்கள் பல நேர்ந்தன; அவை சென்னையை மட்டும் பாதிக்கவில்லை—மாறாக, இந்தியா முழுவதையும் பாதித்தன. அதேபோல, அசாம் வெள்ளங்கள் இந்தியா முழுவதையும் பாதித்தன. எந்தப் பகுதியில் அழிவுகள் நேர்ந்தாலும் நாம் எல்லோரும்தான் ஓடி உதவி செய்கிறோம்.

"வட நாட்டில் வாழ்பவர்களாயினும்—தென்னாட்டில் வாழ்பவர்களாயினும், இந்துக்களாயினும்—கிறித்தவர்களாயினும்—முகம்மதியர்களாயினும்—இந்திய மக்களிடையேயுள்ள 'அடிப்படை ஒற்றுமையை' நாம் மறந்து விடக்கூடாது. நாம் எல்லோரும் ஒன்றாக—ஒருவருக்கு ஒருவர் உதவியுடன் வாழ வேண்டும் என்பதை மறந்துவிடக்கூடாது,"

—என்று, பிரதமர்நேரு, பாலக்காட்டில் நடைபெற்றப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் வடநாட்டு ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக 'இந்தியாவின் ஒற்றுமை' என்ற தனது பழைய பல்லவியை—வஞ்சகம் நிறைந்த விவாதத்தை மையமாக வைத்துப் புலம்பியிருக்கிறார்.

'தீண்டாமை ஒரு பாவம்'

இராசேந்திரர் வருணனை

புதுடில்லி, டிச. 25—

"தீண்டாமையைக் கடைப்பிடிப்பது ஒரு பெரும் பாவமாகும்; மக்கள் இந்தப் பாவத்தைச் செய்யாமலிருக்க வேண்டும்.

"சட்டத்தின் மூலம் தீண்டாமை தடை செய்யப்பட்டிருக்கிறது; ஆனால், இன்னும் அதன் எச்சசொச்சங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை ஒழிக்க வேண்டியது நம் கடமையாகும்.

"இந்த இலட்சியத்தை அடைவதற்குச் சட்டங்கள் மட்டும் போதுமானதல்ல; மனிதர்களுக்கிடையேயுள்ள கேவலமான, வெறுத்து ஒதுக்கத்தக்க வேறுபாடு ஒழியவேண்டும் என்ற மனமாற்றம் மக்களுக்கு ஏற்பட்டாக வேண்டும்,"

என்று, குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத், டில்லியில் தாழ்த்தப்பட்டோர் சிக்கல்கள் குறித்து நடைபெற்ற விவாத அரங்கின் இறுதியில், தாழ்த்தப்பட்ட தோழர்களின் பணியைப் பாராட்டிப் பத்திரங்கள் வழங்கும் போது குறிப்பிட்டிருக்கிறார்.

மைசூர் மாநிலத்தில், ஹாசன் மாவட்டத்திலுள்ள கோமதேஸ்வரர் சிலை சீர்கெட்டுவிடாமல் பாதுகாப்பதற்காக இந்திய சர்க்கார் சென்ற சில ஆண்டுகளாகச் சாத்தியமான சகல முன்னேற்பாடுகளும் செய்துவருகிறார்களாம். 58 அடி உயரமுள்ள அந்தச் சிலை, கல்ல கர்ணமுள்ள கல்லில் செய்யப்பட்டிருக்கிறதாம்.

பட்டம் தாணுவின் பேராசை

சென்னை சர்க்கார் விழிப்புடனிருக்கவேண்டும்

9 தமிழ் வட்டங்களும் கேரளத்திலேயே இருக்குமாம்

திருவனந்தபுரம், டிச. 26—

"திரு-கொச்சியில் உள்ள தமிழ் தாலுகாக்கள், கேரளத்திலேயே இருக்கக்கூடாது என்பதற்கு ஆதாரம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

"ஒன்பது தமிழ்த் தாலுகாக்களும் கேரளத்துடன் இருக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு, பண்டித பந்த், நேரு ஆகியோர் அனுதாபம் தெரிவித்திருக்கின்றனர் கேரளத்தவர் மீது அனுதாபம் காட்டும் அவர்கள், கோரிக்கையைப் புறக்கணித்துவிடுவார்கள் என்று கூறமுடியாது,"

என்றெல்லாம் மேலிடத்தாருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் திரும்பியுள்ள பட்டம் தாணு பிள்ளை பேசியிருக்கிறார்.

பேராசை சொட்டும் அவரது பேச்சு, சென்னை மாநில சர்க்காருக்கு விழிப் பூட்டுவதாயும் அமைந்திருக்கிறது.

"என்றாலும், இது விஷயத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை; மக்கள் சபை, தொடர்புடைய மசோதாவை அங்கீகரிக்கும்போதுதான் முடிவு ஏற்பட்டதாகும்" என்றும் பட்டம் தாணு பேசியிருக்கிறார்.

'மக்கள் சபையின் முடிவு தனது கோரிக்கைக்குச் சாதகமானதாகவே இருக்கும்' என்று அவர் திடமாக நம்புவதாக யூகிக்க இடமும் இருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 27-12-'55 செவ்வாய்

எதிரியின் ஆயுதம்!

வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகள் தங்களது வஞ்சக நெஞ்சத்தில் குடியேற்றிக் குவித்து வைத்திருக்கும் பிற்போக்கான ஆதிக்க ஆசைகள், காட்டுமிராண்டித்தனமான சுரண்டல் நோக்கங்கள் இவற்றை எல்லாம் 'இந்தியாவின் ஒற்றுமை' என்ற உபதேசத் திரைபோட்டு மூடி மறைத்துவிட 'பகீரதப் பிரயத்தனம்' செய்து வருகிறார்கள்.

ஆனால், தாங்கள் மூடி மறைத்துவிட நினைக்கும் கேவலமான ஆசைகளும், நோக்கங்களும், தங்களது விபரீதமான நடைமுறைகளினால் துர்நாற்றத்துடன் வெளிப்படும்போது தங்களை அறியாமலேயே தங்களுக்கு ஏற்படும் பயம் கலந்த ஆத்திரத்தில், ஏதேதோ பேசி விடுகிறார்கள். அந்தப் பேச்சுக்கள், தங்கள் செய்கைகளின் துர்நாற்றத்தை மாற்ற முடியாத 'துர்ப்பாக்கிய'த்தையே அவர்களுக்குத் தேடித் தருகின்றன.

இந்தி மொழித் திணிப்புப் பற்றி வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகள், வேகமாக விடை பெற்றுக் கொண்டிருக்கும் இந்த ஓராண்டில் மட்டும் சமாதானம் கூறுவதாக நினைத்துக் கொண்டு தந்துள்ள கருத்துக்களில் மலிந்துகிடக்கும் முரண்பாடுகள், அவர்கள் நினைத்தபடி, 'எவர் மீதும் இந்தி திணிக்கப்படவில்லை' என்ற சமாதானத்தை, மக்கள்—குறிப்பாகத் தென்னாட்டவர் பெறச் செய்வதற்கு வலுவில்லாது போயின என்பது மட்டுமல்ல — அந்த முரண்பாடுகள் அவர்களதுஉள்ளத்தில் வளர்ந்துகொண்டிருக்கும் ஆதிக்க ஆசைகளை - சுரண்டல் நோக்கங்களை—வஞ்சக எண்ணங்களை ஒளிவு மறைவின்றி 'நிர்வாண'மாக்கிக் காட்டும் ஒளிவிளக்குகளாயும் அமைந்துவிட்டிருக்கின்றன. இதுபற்றியும், இந்தித் திணிப்புப் பற்றிய வடநாட்டவரின் சொல்லும்-செயலும் வேறுபட்டு நிற்கும் முறைகள் பற்றியும் நாம் இங்கு பன்முறையும் விளக்கி வந்திருக்கிறோம்.

திராவிடர் மீது அரசியல், பொருளியல் துறைகளில் ஆதிக்கம் செலுத்துவதற்காக 'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பின் மூலம் வடநாட்டவர் பெற்றிருக்கும் அதிகாரம் நிலைத்து நீடித்து, அவர்களுக்குப் பலன் பலவும், சுவை மிகவும் தரவேண்டும் என்ற ஆதிக்க ஆசையினால் தான்—சுரண்டல் நோக்கத்தினால்தான், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் இந்தி ஆதிக்கம் புரியவேண்டும் என்று விரும்புகிறார்கள் — என்று, தென்னாட்டவர்—திராவிடர் கூறி வருகின்றனர்.

இந்தியப் பேரரசின் மூலவர்களாயுள்ள வடநாட்டு அரசியல் வாதிகளுக்கு இந்த நோக்கம் இல்லை என்று உண்மையிலேயே எவரேனும் நம்பிக் கொண்டிருந்தால், அவர்கள், மிகப் பயங்கரமான ஏமாற்றத்திற்கு உள்ளாவார்கள் என்பது நிச்சயம்.

இந்த நோக்கத்திற்கு அல்லாது வேறெந்த நோக்கத்திற்காக, இந்தி மொழி இந்தியாவின் அரசியல் மொழியாக இருக்க வேண்டுமென்கிறார்கள்?

'இந்தியா என்பது ஒரே நாடு; அதில் வாழும் மக்கள் அனைவரும் இந்தியர்' என்று தாங்கள் கூறும் முழுப் பொய்யை மெய்யாக்கிக் காட்டுவதற்காகத்தானே, 'இந்தி மொழியை இந்தியாவில் உள்ள அத்தனை மக்களும் கற்கவேண்டும்'—என்று கூறுகிறார்கள் வடநாட்டவர்? அல்லாது, வேறு எதற்காக?

'இந்தி மொழி எவர்மீதும் திணிக்கப்படவில்லை,' என்று, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் இந்த 'உத்தமர்'கள், தாங்கள் ஓரிடத்திலேயிருந்துகொண்டு இந்த உறுதிமொழியை வழங்கிக் கொண்டிருக்கும்போதே, வேறோர் இடத்திலிருந்து கையொப்பமிட்டுப் பிறப்பிக்கும் அவசர உத்தரவுகளையும்—அகில இந்தியாவிலும், ஆட்சித் துறையில் இந்தி மொழியே இடம் பெறும்—என்ற உத்தரவுகளையும் வெளியிடுகிறார்கள் என்பதை நாம் சுட்டிக் காட்டும்போது, 'இந்தியாவின் ஒற்றுமை,' 'அகில இந்திய ஐக்கியம்' என்ற உபதேசங்களைத்தானே — சொல் வேறு—செயல் வேறு என்ற தங்கள் போக்கினை மறைக்க—பதிலாகத் தருகின்றனர். 'பல மாநிலங்களிடையேயும் நிர்வாகத் தொடர்பு கொள்வதற்காகத்தான், இந்தி மொழி; இந்தியாவில் உள்ள அத்தனை மொழிகளையும்—ஏன் அரசியல்சட்டத்தின் 'மேலான' அங்கீகாரம் பெற்றுள்ள பதினான்கு தேசிய மொழிகளையும் கூட இந்தியாவின் ஆட்சி மொழிகளாகக் கொள்ள முடியாது' என்று சமாதானம் கூற முற்படுகின்றனர்.

ஏன், பதினான்கு மொழிகளையும் இந்தியாவின் ஆட்சிமொழிகளாகக் கொள்ளமுடியாது? இலங்கையை, சுவிட்சர்லாந்தை, கனடாவை, இன்னும் வேறு பல நாடுகளைச் சுட்டிக் காட்டி, அங்கெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் ஆட்சி மொழிகளாக இல்லையா — என்ற கேள்விக்கு, நியாய உள்ளம் கொண்டோரானால், வடநாட்டவர் பதில் தரவேண்டும்.

'மொழிவழி மாநிலங்கள் வேண்டும்' என்ற கோரிக்கைக்காக, உயிரைத் திரணமாக மதிக்கும் உணர்ச்சி பெற்றிருக்கும் பல தொன்மையும், வளமையும் செறிந்த மொழி பேசும் மக்களின் கவனத்தைத் திசை திருப்ப, 'மண்டல மன்றம்' என்ற வஞ்சக வெடிகுண்டை வீசியிருக்கும் பண்டித நேரு மாநிலங்கள் சபையில் கடந்த கிழமை இறுதியில் பேசும்போது தெரிவித்துள்ள கருத்து, ஒன்று—இந்தித் திணிப்பு பற்றிய அவரது பழைய வாதங்களைச் சவாலுக்கு அழைப்பதாய் அமைந்திருக்கிறது.

'ஒரு மாநிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு மொழிகள் வழங்குமானால், அந்த மாநிலத்தில் இரு மொழிகளாலும் நிர்வாகம்— ஆட்சி நடத்துவதில் கஷ்டமிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை' என்று பேசியிருக்கிறார்.

'மொழிவழி மாநிலங்கள் வேண்டும்' என்ற வாதத்தை முறிக்க அவர் மேற்கொண்ட ஆயுதம் அவரையே திருப்பித் தாக்க நமக்குப் பயன்படுகிறது.

மாநிலங்களிலேயே — சில இலட்சம், அல்லது ஒன்றிரண்டு கோடி மக்கள் தொகையுள்ள மாநிலங்களிலேயே நிர்வாகம் ஆட்சி இருமொழிகளில் நடத்துவது கடினமல்லவென்றால், பல கோடி மக்கள் வழங்குகின்ற—அரசியல் சட்டத்தின் அங்கீகாரம் பெற்ற பதினான்கு தேசிய மொழிகளிலும் இந்தியப் பேரரசின் நிர்வாகம் நடத்துவது எப்படி முடியாத—இயலாத — கடினமான—சாத்தியமற்ற ஒன்றாகிவிடும்? இரு மொழிகளால் ஒரு சிறு நிலப்பரப்பான மாநிலம் ஒன்றின் நிர்வாகம் இடையூறின்றி நடைபெற முடியுமானால், இந்தியத் துணைக் கண்டம் போன்ற பெரிய தொரு நிலப்பரப்பில் பல மொழிகளும் ஆட்சி மொழிகளாக வீற்றிருந்து நிர்வாகத்தை நடத்துவதில் என்ன இடையூறு வந்துவிட முடியும்? பண்டித நேரு பதில் தருவாரா?

இந்தித் திணிப்புப் பற்றி வடநாட்டவர் என்னதான் தங்கள் மூல நோக்கத்தை மூடித் திரையிட நினைத்தாலும், அவர்களதுவஞ்சகநெஞ்சத்தில் பொங்கி எழும் ஆதிக்க வெறியைப் பிறர் புரிந்துகொள்வதற்குச் சிரமம் வைக்காமல், தங்கள் உள்நோக்கத்தை உலகறியச் செய்யும் முரண்பட்ட வாதங்களை அள்ளித் தருவதற்காக, அந்த ஏகாதிபத்தியவாதிகளை நாம் பாராட்டத்தானே வேண்டும்.

புதிய மாநிலங்கள்

காங்கிரஸ் மேலிட முடிவு

ஜன. 5-ந் தேதிக்குள் தெரியும்?

புதடில்லி, டிச. 24—

பம்பாய், பஞ்சாப், தெலிங்கானா பற்றிய இறுதி முடிவுகளை நேரு, பந்த், தேபர், ஆசாத் ஆகியோரடங்கிய துணைக் குழுவினர் மேற்கொள்ளுவது என்றும், இத்துடன் மாநிலக் குழு அறிக்கை பற்றிய விவாதத்தை முடித்துக் கொள்ளுவது என்றும் காங்கிரஸ் செயற்குழு முடிவு செய்து விட்டிருக்கிறது.

வரும் ஜனவரி 15-ந் தேதிக்குள்ளாக மாநில புனரமைப்புக் குறித்த மசோதா தயாரிக்கப்பட வேண்டியிருப்பதால், துணைக் குழுவினர் தங்கள் முடிவை ஜனவரி 5-ந் தேதிக்குள் தெரிவித்து விடுவர் என்று கூறப்படுகிறது.

சென்னை மாநில 'பப்ளிக் பிராசிக்கியூட்டர்'

சென்னை மாநிலத்தின் புதிய 'பப்ளிக் பிராசிக்கியூட்டரா'க திரு. பி. எஸ் கைலாசம் அவர்களை நியமித்து, சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

1956 சனவரி 1-ந் தேதி முதல் 5 ஆண்டுக் காலம்வரை இப்பதவியில் அவர் இருப்பார்.

'இந்தி மொழி எதிர்ப்பு ஏன்?'

'பெரும்பான்மை வாதம் சரியானதுதானா?'

'இந்தி மொழியின் பிரிவுகள் எத்தனை?'

சென்னைக் கூட்டத்தில் க. அன்பழகன் விளக்கம்

"மறைமலை அடிகளார் தாம் வாழ்ந்த காலத்தில் இந்நாட்டிற்குச் செய்த தொண்டிலெல்லாம சிறந்தத் தொண்டு இந்தி எதிர்ப்புத்தான். மறைமலை அடிகள் 'இந்த நாட்டில்—தமிழ் நாட்டில் இந்தி மொழித் திணிப்புக் கூடாது' என்று கூறியபோது, அவரது கருத்தினைத் தமிழ் நாட்டு அறிஞர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர். 'இந்த நாட்டில் ஏன் இந்தி இருக்கக்கூடாது?'—என்பதற்கான தக்கக் காரணங்களை மறைமலை அடிகள் அவர்கள்தான் முதன் முதலில் நாட்டவருக்கு எடுத்து விளக்கினர். அந்த நேரத்திலும்—இந்த நேரத்திலும் கூடத்தான்—அவரது அந்தக் கருத்துக்களைப் புரிந்துகொள்ளும் தகுதிகூட இல்லாதவர்களும் இருந்தனர்—இருந்தும் வருகின்றனர்.

"தமிழ் நாட்டிற்கு இந்தி மொழி தேவையற்றது என்பதை எக்கட்சியினரும ஒப்புக்கொள்ளத்தான் செய்கின்றனர்; தேசியத் தலைவர்களுங்கூட அதை ஒப்புக்கொண்டுதான் வருகின்றனர்.

"'தமிழ் நாட்டின் ஆட்சி மொழி தமிழ் மொழியாகத்தான் இருக்கவேண்டும்' என்ற உணர்வு உரிமை உணர்வு—இன்று மக்களிடையே பரவிவிட்டது. இங்குமட்டுமல்ல—ஆந்திரம், கேரளம், மராட்டியம் போன்ற எல்லா நாடுகளிலுமே, அங்குள்ள மக்கள், தங்கள் தங்கள் மொழிதான் ஆட்சி மொழியாக—பொது மொழியாக—தேசீய மொழியாக ஆகவேண்டுமென்ற உணர்வுகொண்டுவிட்டனர். இப்படிப்பட்ட உணர்வுகள் பொங்கி எழும்போது, இந்தி மொழி தேசீய மொழியாக இருப்பதற்குத் தகுதியுடையதுதானா?

"இந்தியை இந்நாட்டில் புகுத்துவதற்குக் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் பெருமுயற்சி செய்கின்றனர்; 'இந்த நாட்டிற்கு இந்தி கூடாது—இந்தியை இங்கு திணிக்கக்கூடாது—பிடிவாதம் வேண்டாம்' என்று நாம் குரல் எழுப்புகிறோம்; ஆனால், அரசாங்கமோ, ஆத்திரம் அடைகிறது; மக்கள் குரலைக் கேட்கவில்லை — இந்தியை வலுக் கட்டாயமாகப் புகுத்துகிறார்கள்.

"இந்தித் திணிப்பிற்குப் பெரும்பான்மை வாதம் கூறப்படுகிறது. பெரும்பான்மை வாதம், சிறுபான்மையினருக்குத் துன்பம் விளைவிப்பதாக இருக்கக்கூடாது. சிறுபான்மையினருக்குத் துன்பம் விளைவிக்கும வகையில் பெரும்பான்மை வாதம இருக்க எவ்வித நியாய உரிமையும் கிடையாது.

"மொழியை அடிப்படையாக வைத்து இதை நாம் கணக்கிட்டால், 90 சதவிகித மக்கள் ஒரு மொழி பேசுபவராக இருந்தாலும்கூட, அவர்களது மொழி, சிறுபான்மையினரான மற்ற 10 சத விகிதத்தினர்மீது திணிக்கப்படக் கூடாது. அவ்வாறு செய்வது நியாயத்தின்பாற்பட்டதல்ல. சிறுபான்மையினர் காட்டுமிராண்டிகளாகவும், அவர்களது மொழி அநாகரீகமானதுமாக இருந்தால் வேண்டுமானால், பெருமபான்மையினரின் மொழி புகுத்தப்படலாம்; மற்றப்படி, எவ்வகையிலும் பிறமொழியைப் புகுத்துவது நியாயமில்லை.

"இன்றைய நிலையில் மேலைநாடுகளை எடுத்துக் கொண்டால்கூட, சுவிட்சர்லாந்து நாட்டில் பல்வேறு மொழிகள் வழங்கப்படுகின்றன. ஜெர்மன், பிரெஞ்சு போன்ற மொழிகள் மட்டுமல்லாமல், ஜெர்மன்—இத்தாலி போன்ற சில கூட்டு மொழிகளும் இருக்கின்றன. இப்படிப்பட்ட கூட்டு மொழிகள் பேசுவோர் தொகை 3 அல்லது 4 சத விகிதமாக இருந்தபோதிலும்கூட, அம்மொழிகளும அந்நாட்டின் பொதுமொழிகளாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன.

"ஆனால் இந்தியாவில் மட்டும் இப்படிப்பட்ட நிலை ஏன்? இங்கு 10 சதவிகித மக்களால் பேசப்படுகிற ஒரு மொழிக்கும், மத்திய சர்க்காரில், ஆட்சி மொழி என்ற அந்தஸ்து தந்திருக்க வேண்டுமே?

"இந்தியாவில் இன்றைய மக்கள் தொகையான 36 கோடி மக்களில் 13 கோடி பேர்தான் இந்தி மொழி பேசுவோர்—அதாவது, சுமார் 33 சதவிகிதம் மக்கள்தான் இந்தி மொழி பேசுவோர் ஆவர். இந்தி மொழி பேசுகின்ற இந்த 33 சதவிகிதத்தினர் போக எஞ்சிய சுமார் 65 சதவிகித மக்களுக்கும் இந்தி மொழி, தங்களுக்கு அப்பாற்பட்ட மொழியேயாகும். அப்படிப்பட்ட நிலையில் உள்ள இந்தி, இன்று இந்தியாவின் ஆட்சி மொழியாக வருமேயானால், பெரும்பகுதியினரான 65 சதவிகித மக்களுக்கும்—தங்களுடைய குறைகளை சர்க்காருக்கு எடுத்துச் சொல்லவோ, அல்லது இவைபோன்ற பிற எந்தக் காரியங்களையும் செய்யவோ முடியாத நிலை ஏற்படும்.

"இந்தி மொழி பேசுவோர் 13 கோடி பேர் என்று குறிப்பிடப்படுகிறது; ஆனால், உண்மையில், இந்தி மொழியிலேயே வெவ்வேறு பிரிவுகள் இருக்கின்றன. இந்தி மொழிக்கும—இந்துஸ்தானி மொழிக்கும்வேற்றுமைகள் உண்டு. இப்படி. இந்த வரிசையில்மட்டும சுமார் 10 மொழிகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமை குன்றி—வெவ்வேறு போக்குக் கொண்ட மொழிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட 10 மொழிகளையும் பேசுபவர்களை உள்ளடக்கித்தான் —'இந்தி மொழி பேசுவோர் 13 கோடி பேர்' என்று கூறப்படுகிறது. அந்த 13 கோடி பேர்களும, ஒருவர் பேசும மொழி மற்றவருக்குத் தெரியாத—புரிந்து கொள்ள முடியாத நிலையிலதான் இருக்கின்றனர்.

'ஆனால், தமிழ் மொழியோ அப்படிப்பட்டதல்ல; தமிழ் மொழி—எப்பகுதியில் பேசப்பட்டாலும எவராலும் புரிந்து

(தொடர்ச்சி 4-ம பக்கம் பார்க்க)

பக்கிங்காம் கர்நாடிக் ஆலைத் தொழிலாளர்கள்

முதல் தவணையாக ரூ. 50,000 அளித்தனர்

சென்னை, டிச. 26—

நேற்று மாலை, பெரம்பூர் கான்ரான்ஸ்மித் மைதானத்தில், சென்னைத் தொழிலாளர் யூனியன் ஆதரவில் நடைபெற்றப் பொதுக் கூட்டமொன்றில், தமிழ்நாட்டுப் புயல் நிவாரண நிதிக்காக சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்—நிர்வாகிகள் சார்பில், பொது மராமத்து இலாகா அமைச்சர் இராமநாதபுரம் இராஜா அவர்களிடம் ரூ. 50,000-த்திற்கு 'செக்' ஒன்று தரப்பட்டது.

பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்களின் ஒரு நாள் அடிப்படைச் சம்பளமும்—கிராக்கிப்படியும், அந்த ஒருநாளில் நிர்வாகத்திற்குக் கிடைக்கும் இலாபமும் சேர்த்தே இந்தத் தொகையாகும்.

சென்னைத் தொழிலாளர் யூனியன் தலைவர் எஸ்.சி.சி. அந்தோணி அவர்கள் இது பற்றிக் குறிப்பிடுகையில், புயல் நிவாரண நன்கொடையின் முதல் தவணையாகவே இந்தத் தொகை தரப்படுகிறதென்று விளக்கிவிட்டு மேலும் சொன்னார்:—

"14,000 தொழிலாளரில் 10,000 தொழிலாளர்கள் தனித்தனியாக ஆலையின் பொறுப்பாளருக்குச் சமர்ப்பித்த மனுக்களில், தமது ஒருநாள் சம்பளத்தையும்—கிராக்கிப் படியையும் புயல் நிவாரண நிதிக்குக் கொடுத்து ஜனவரி மாதத்தில் அதைப் பிடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர். (இதற்கென 1956 ஜனவரியில், ஏதேனும் ஒரு ஞாயிற்றுக்கிழமை பணியாற்றுவர்; ஓய்வு நாளில் வேலை செய்வதால் கிடைக்கும் இலாபத்தை நிர்வாகிகள், நிவாரண நிதிக்குக் கொடுக்க வேண்டுமென்பது ஏற்பாடு)

"இந்த மனுதாரர்களில் 9,000 தொழிலாளர் தினசரி கூலியைத்தான் நிர்வாகிகள் மதிப்புப் போட முடிந்தது. இதில் ரூ. 30,000 சேர்ந்தது; நிர்வாகத்தின் அன்றைய சராசரி இலாபம் ரூ 20,000 சேர்ந்ததுதான் ரூ. 50,000 ஆகிறது. எனவே, முதல் தவணையாக இந்தத் தொகை அனுப்பப்படுகிறது. மற்றத் தொழிலாளர்களின் மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது; விரைவில் இரண்டாவது தவணைப் பணம் நிவாரண நிதிக்குக் கொடுக்கப்படும்."

'செக்'கைப் பெற்றுக்கொண்ட அமைச்சர், தொழிலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு பேசுகையில் தொழிலாளர்களும்—நிர்வாகிகளும் ஒத்துழைத்தால், பல பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம் என்றும், பி. அண்டு சி. மில் தொழிலாளரும் — நிர்வாகிகளும் மற்றத் தொழிற்சாலைகளுக்குச் சிறந்த முன் மாதிரியாக விளங்குகிறார்களென்றும் குறிப்பிட்டார்.



வேதாரண்யப் பகுதியில் புயற்காற்றின் தாக்குதலை எதிர்த்து நிற்க இயலாமல் அதற்குத் தலைதாழ்ந்து வணங்கிக்கொடுத்த மின்சார இரும்புக் கம்பம்.

கழகத் தோழர்கள் தந்த காணிக்கை

காட்டுப்பாடி (வ ஆ. மாவட்டம்) தி. மு கழகத் தோழர்கள் பொது மக்களிடமிருந்து வசூலித்து, தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மூலம் கொடுத்து உதவிய தொகை ரூ 151—5—3-ம் பெற்றுக்கொண்டோம்.

சூலூர் (கோவை மாவட்டம்) கிளைக் கழகம், புயல் நிவாரண நிதிக்காக ரூ 25 தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது—பெற்றுக்கொண்டோம்.

தஞ்சை மாவட்டம் செம்பனார் கோயிலையடுத்த விளாநகர் தோழர் எம். கோவிந்தசாமி அவர்களால் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 25—8—0-ம் பெற்றுக்கொள்ளப்பட்டது

—தி. மு. க. தலைமை நிலையம்

★

திருவள்ளுவர் நூல்நிலையம்

14, 18—12—55 ஆகிய இரு நாட்களிலும் சென்னை 6-வது வட்டம் வியாசர்பாடியிலுள்ள திருவள்ளுவ நூல்நிலையத் தோழர்கள் 212 பழைய துணிகளும், 42¼ படி அரிசியும் திரட்டினர்.

வேதாரண்யம் புகைவண்டி நிலையத்திற்கு அருகில், வெள்ளத்தில் மனைவி மக்களை இழந்து வருந்தும் ஒரு குடும்பத் தலைவரிடம் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விவரம் கேட்டறிந்துகொண்டிருக்கிறார். தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ உடன் நிற்கிறார். பத்துப் பேர்கள் இருந்த ஒரு குடும்பத்தில் X இக்கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கும் தந்தை, ஒரு மகன் ஆகிய இருவரைத் தவிர ஏனைய எட்டுப் பேர்களும் வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டார்கள் என்ற செய்தியைப் பொதுச் செயலாளரிடம் அத்தந்தையார் அறிவித்துக்கொண்டிருக்கிறார்.

புயல் நிவாரணச் சிறப்புக்கூட்டம்

★

1—1—56 மாலை 5 மணிக்கு சென்னை-எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில் (எழும்பூர் இரயிலடிக்கருகில்) நடைபெறும்

அண்ணா நெடுஞ்செழியன் கருணாநிதி

மற்றும் பலர் பேசுவர்

★

அனுமதி நிபந்தனை: பயன்படக்கூடிய துணி ஒன்று தருவோரே அனுமதிக்கப்படுவர்

—சென்னை மாவட்ட தி.மு.க

செய்திச் சுருள்

★

சென்னை மாநில க்ஷவரத் தொழிலாளர் சங்கம்

20—12—55ல், சங்க இல்லத்தில் (63, புளியந்தோப்பு பெரிய சாலை, சென்னை) திரு. பி. சி. கல்யாணசுந்தரம் தலைமையில் சங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் சங்கக் கொடியேற்றுவித்தார். தோழர்கள் எஸ். வெங்கட்ராம், ஜி. கண்ணன், ஆர். வேணுகோபால், ஜம்புலிங்கம் ஆகியோர் சங்க வளர்ச்சி குறித்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர் சங்கச் செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. புயல், நிவாரணத்திற்கென சங்கத்தின் சார்பில், ரூ. 57—7—0 வசூலித்து அனுப்பப்பட்டது.

நன்றியறிவிப்பு

"15—12—55-ல் நடைபெற்ற எங்களது திருமண விழாவிற்கு வந்திருந்து, வாழ்த்துரைத்து மகிழ்வித்த அனைவருக்கும் எங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்" என்று நிலக்கோட்டை தோழர் எம். எஸ். பால்ராசு—தோழியர் எம். எஸ். பி. பாப்பா ஆகிய இருவரும் அறிவித்துக்கொள்ளுகின்றனர்.

• • •

அன்பளிப்பு

15—12—55-ல், நிலக்கோட்டையில் நடைபெற்ற தோழர் பால்ராசு—தோழியர் பாப்பா திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை அளிக்கப்பட்டது. பெற்றுக்கொண்டோம் — நன்றி —பொறுப்பாளர்.

அனுதாபம்

திருச்சி மாவட்ட ஆங்கியம் தி. மு. கிளைக் கழகத்தின் மாவட்டப் பிரதிநிதி தோழர் சு. ஆறுமுகம் அவர்கள் 9-12-55 மாலை 4 மணிக்கு, சிரங்கம் அரசியலார் மருத்துவமனையில் இயற்கையடைந்தார். அவரது குடும்பத்தாருக்கு ஆங்கியம் தி. மு. கழகச் சார்பில், செயலாளர் கு. முத்துசாமி அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

• • •

தாத்தையங்கார்பேட்டை தி. மு கழகத் துணைச் செயலாளர் தோழர் ப. தாண்டவன் அவர்களின் தாயார் மறைவுக்கு இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

புயல், வெள்ள நிவாரணத்திற்கு எம். ஜி. இராமச்சந்திரன் அன்பளிப்பு

நடிகமணிகளின் கலா நிகழ்ச்சி

சென்னை, டிச. 26—

தமிழகப் புயல், வெள்ளக் கொடுமைகளுக்கு ஆளாகித் தவிக்கும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக நிதி திரட்டும் பணியில் தமிழக நாடக, திரைப்பட நடிக-நடிகையர் பெரும் ஆர்வமும் ஊக்கமும் கொண்டிருப்பதையும், பாராட்டற்குரிய அளவில் பெரும் பணியில் அவர்கள் ஈடுபட்டிருப்பதையும் அனைவரும் அறிவர்.

புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் அவர்கள் மட்டும் தென்னிந்தியக் கலைஞர்களின் புயல் நிவாரணக் குழுவிடம் ரூ. 5,000; மதுரை நகரசபைத் தலைவரிடம் ரூ. 500; எம். ஜி. ஆர் நாடக மன்றத்தினர் காட்பாடி நாடகத்தின் மூலம் ரூ 1271; உண்டியல் வசூல் மூலம் ரூ. 192; சில்லரை வசூல் ரூ 60 தந்திருக்கிறார் மேலும். தான் நடிக்கும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ. 1,000 விதம் கொடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

சென்ற சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களிலும், சென்னை திருவல்லிக்கேணி கலாமண்டபத்தில், புயல் நிவாரண நிதிக்காக வென்று, எல்லா நடிக, நடிகையர்களும் பங்கேற்றுக்கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இரண்டு தினங்களிலுமாக மொத்தம் ரூ. 15,000 வசூலானது.

சென்ற 18-ம் தேதியன்று மாநில நிதி அமைச்சரிடம் அளித்த நிதியுடன் சேர்த்து—இந்தத் தொகையும் உட்பட—மற்றும் சில சேகரிப்பு நிதிகளுடன், இதுவரையிலும் கலைத்துறை அன்பர்கள் ரூ 64,500 திரட்டியிருக்கின்றனர்!

இரண்டாம் நாள் கலை நிகழ்ச்சியின் இறுதியில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், புயல் நிவாரண நிதி திரட்டும் பணியில் கலைத்துறை அன்பர்கள் அனைவரும் மேலும் மேலும் ஈடுபடுவர் என்று குறிப்பிட்டார்.

மதுரை மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டப் பகுதிகளைப் பார்வையிடச் சென்ற பொதுச்செயலாளரும், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களும், தஞ்சை மாவட்டச்செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும் படத்தில் காணப்படுகிறார்கள்.

★

* *

தலைமைக் கழகச் செய்தி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29-1-56-ல் சிதம்பரத்தில்

நடைபெறும்

இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

—தி. மு. க. தலைமை நிலையம்

* *

சென்னை 5-வது வட்டம்

18—12—55 காலை 10 மணி முதல் மாலை 6-30 மணிவரை, 5-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் வட்டப் பகுதிகளில் சுற்றி ரூ. 70—3—6 ரொக்கமும், 32 படி அரிசியும், 378 துணிகளையும் திரட்டி, 19—12—55-ல், சென்னை மாவட்டக் கழகத்தவரிடம் ஒப்படைத்தனர்.

சென்னை 15-வது வட்டம்

18—12—55 காலை 9 மணிக்கு, 15-வது வட்டக் கிளைக் கழகத் தோழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு, தங்கள் பகுதி வீதிகள் வழியாகச் சென்று, ரூ. 50—2—0 ரொக்கமும், 50 படி அரிசியும், 561 பழைய துணிகளையும் திரட்டி, சென்னை மாவட்டக் கழகத்தாரிடம் ஒப்படைத்தனர்.

‘ஆட்சி மொழியாகும் நிலை இந்திக்கு உண்டா?’

க. அன்பழகன் கேள்வி

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கொள்ள முடியும். சென்னையில் பேசும் தமிழையும், திருநெல்வேலியில் பேசும் தமிழையும், யாழ்ப்பாணத்தில் பேசும் தமிழையும்—தமிழ் மக்கள் புரிந்துகொள்ளத்தான் செய்கின்றனர்; ஏனென்றால், தமிழ் மொழி தனித்தியங்கும் தொன்மொழி; இந்தி மொழியோ, வங்காளி, பீகாரி, உருது, சமஸ்கிருதம் ஆகிய பிற மொழிகள் சிலவற்றின் தொடர்பால் ஏற்பட்ட ஒரு மொழிதான். அப்படிப்பட்ட ஒரு மொழியைத்தான்—பிற மொழிகளால் காப்பாற்றப்பட்ட ஒரு மொழியைத்தான்—65 சதவிகித மக்களுடைய தலைகளிலும் சுமத்துவதற்கு இந்திய அரசாங்கம் முனைந்துகொண்டிருக்கிறது.

“கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் மறைமலை அடிகளும் இதனை எதிர்த்தார்; அந்தக் காலத்தில், ஆச்சாரியார் அவர்களது மதிப்பு அதிகமாக இருந்தக் காலம்; ‘தென்னாட்டில் இந்தியை முதல்முதலாக நான் புகுத்துவேன்; இந்தியை எதிர்ப்பவர்களை நான் இலகுவில் விடுவதில்லை; நான்தான் தமிழர்களுடைய பிரதிநிதி; தமிழர்களுடைய தலையில் எதைச் சுமத்தினாலும் தாங்கிக்கொள்வார்கள்’—என்றெல்லாம் அவர் அப்போது கூறினர். ஆனாலும், போராட்டத்திற்கு அஞ்சாதத் தலைவர்கள் எல்லாம் ஒன்று திரண்டு, இந்தி எதிர்ப்புக்காகப் போராடினர். அரசியல் தலைவர்கள்தான் போராட்டத்தில் பங்கு கொண்டனரே தவிர, மறைமலை அடிகள் போன்ற பிற அறிஞர்களது சூழ்நிலை, அவர்களைப்போராட்டத்தில் கலந்துகொள்ளவிடவில்லை. ஆனால், மறைமலை அடிகள் போன்றோரும் அந்தப் போராட்டங்களிலெல்லாம் கலந்துகொண்டிருப்பார்களேயானால், நிச்சயம், அன்றையத் தினத்திலேயே தமிழ் நாட்டின் விடுதலையைக் கண்டிருப்பார்கள்.”

—இவ்வாறு, 25—12—55 மாலை 6 மணி அளவில், சென்னை—இராயபுரம் மறைமலை அடிகள் நாடக மன்றத்தின் நூல்நிலைய 4-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் பேசிய தோழர் க. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

“இந்தியா முழுமையிலும் இந்தி மொழியைத் திணித்துவிட வேண்டுமென்பதற்காக அரசாங்கத்தார் மேற்கொண்டு வரும் பெருமுயற்சிகள் ஏராளம்.

“‘இந்தியா ஒரே நாடு; இந்தியாவின் ஆட்சி மொழிக்கு மதிப்பு இருக்கவேண்டும்— அம்மொழிக்கு செல்வாக்கு வேண்டும்; அப்படிப்பட்ட ஒரு மொழியினால்தான் நாட்டை ஆள முடியும்,’ என்ற கருத்துக்கள்தான் இந்தியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று கூறுவதற்கான காரணங்களாகும்; ஆனால், இன்றுள்ள உண்மை நிலையில், தமிழ் மக்களுக்கோ, அல்லது மற்றெந்த மொழியினருக்கோ, இந்தி மொழியினால் எவ்வித நன்மையுமில்லை; அது அவர்களுக்குத் தகுதியும் அற்றது.

“அண்மையில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாடொன்றில், இந்தி மொழியில் பேச்சுக்கும்—எழுத்துக்குமுள்ள வித்தியாசம் எடுத்துக் காட்டப்பட்டது. இந்தி மொழி பேசுகின்ற மக்களது பேச்சுக்கும்—எழுத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது ‘எழுத்து நடையில் உருவாகி வரும் இந்தி மொழிக்கும்—மக்கள் பேசுவதில் உருவாகி வரும் இந்தி மொழிக்கும் வித்தியாசம் இருக்கிறது. வித்தியாசம் ஒருபுறம் இருக்க, இந்தி மொழி இன்னும் ‘உருவாகும்’ நிலையில்தான் இருக்கிறது’—என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

“ஆனால் தமிழ் மொழியினை எடுத்துக்கொண்டால்; பேச்சு நடைக்கும் — எழுத்து நடைக்கும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. வித்தியாசம் இருந்தாலும் கூட, தமிழுக்கென எழுத்துக்கும் —பேச்சுக்குமாக ஒரு பொதுநடை இருக்கத்தான் செய்கிறது இதற்குக் காரணம், தமிழ் மொழி நல்ல இலக்கியத்துடன் — நெறியுடன் வளர்ந்தது. அம்மொழி பண்பட்ட — இயற்கையோடியைந்த ஒரு மொழியானதாலேயே அதற்கென ஒரு பொது நடை வழங்குகிறது.

“எழுத்திற்கும் — பேச்சிற்கும் வேற்றுமையுடன் விளங்கி, ‘உருவாகின்ற’ கட்டத்திலேயே இருக்கிற அந்த இந்தி மொழி ஆட்சி மொழியானால் என்ன ஆகும்? ஆட்சி எப்படி நடக்கும்?

“கொஞ்ச நாட்களுக்கு முன் புருஷோத்தமதாஸ் தாண்டன், பாராளுமன்றத்தில் பேசும்போது, இலக்கங்களைக் குறிக்கும் எழுத்துக்களையெல்லாம் இந்தி மொழியிலேயே இனி எழுதிக் கையாள வேண்டும்—என்று கூறியிருக்கிறார். அவர் இந்தி மொழியில் சிறிதளவு வல்லவர்—ஆனால், மொழிவெறிதான் அவருக்கு அதிகமே தவிர, அறிவு கிடையாது இந்தி மொழியே இன்னும் தெரியவில்லை எவருக்கும்—இந்தி பேசும் மக்களுக்குள்ளேயே பலப்பல பிரிவுகள்! அவர்களுக்கே அது தெரியாதென்றால், நாட்டிலே உள்ள பிற மக்களுக்கு அந்த இந்தியினால் என்ன இலாபம்?

“தமிழ் மொழியிலும் கூட 1, 2, 3 என்ற இலக்கங்களைக் குறிப்பிட எழுத்துக்கள் இருக்கத்தான் செய்கின்றன; ஆனாலும், அதனை இன்று வழக்கத்தில் கொண்டுவரவில்லை மக்கள்; அதனைத் தேவையற்றதாக மக்கள் கொண்டுவிட்டார்கள். தங்களது சுய அறிவிற்கும், வாழ்க்கைக்கும் இன்றியமையாதத் தேவையாக இருந்தவைகளை மட்டுந்தான் தமிழர்கள் அக்காலத்தும் ஏற்றுக்கொண்டனர்—இக்காலத்தும் ஏற்றுக் கொள்வர் ஆனால் ஒரு சிறிதும் தேவையற்ற இந்த இந்தியை எப்படி ஏற்றுக் கொள்ளப்போகின்றனர்?

“இந்த இந்தி மொழிப் பிரச்சினையிலாவது நமது மாநில கல்வி அமைச்சர் சிறிது தைரியம் உடையவராக இருக்கிறார். ‘பல்கலைக் கழகங்களிலெல்லாம், போதனா மொழியாகத் தமிழ் மொழிதான் இருக்கவேண்டும்’ என்று அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட்டார்— அவர் பாராட்டப்படவேண்டியவர் தான்.

“இதே நேரத்தில், வடநாட்டில், தங்கள் மொழியின் மீதுள்ள பற்றை, வெறியாக மாற்றிக் கொண்டு, அவர்கள் ‘இந்தியர்களனைவரும் இந்தியில்தான் கல்விபயில வேண்டும்’ என்று கூறுகின்றனர். இந்தியாவிலுள்ள அனைவரும் கல்வி மொழியாக ஏற்றுக்கொள்ளும் தகுதி பெற்றிருக்கிறதா இந்தி மொழி என்பதைத்தான் நாம் மீண்டும் கேட்கிறோம்.

“இந்தி மொழியை வளப்படுத்தத் தெரியாத வடநாட்டுத் தலைவர்களெல்லாம், ‘இந்தி மொழிதான் ஆட்சி மொழியாக ஏற்கக் கொள்ளப்பட வேண்டும்’ என்று கட்டாயப்படுத்துகின்றனர்.

“ஆனால், மறைமலை அடிகளாரது இயக்கம் வளர்ந்திருந்தால், எப்போதோ, ‘தென்னாட்டின் மொழி விடுதலை’யைக் கண்டிருக்கலாம்.

“‘தென்னாட்டின் விடுதலை’ என்று குறிப்பிடப்படுகிற இது, ஒரு அரசியல் பிரச்சினையாயிற்றே என்று கருதலாம்; ஆனால், வாழ்க்கைப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், எங்கெங்கு தடைகள் நேரிடினும் அவற்றை உடனடியாக எதிர்த்தேதான் ஆக வேண்டும்.

“‘ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியைப் புகுத்துவோம்’— என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். ஆங்கில மொழி ஒன்றுமட்டும் இங்கிருந்து அகற்றப்பட்டுவிடுமானால், ‘இந்தியா’ என்ற ஒரு நாடு உலகில் இருக்கிறது என்பதையே வெளி உலகிற்கு எடுத்துக்காட்ட இயலாத நிலைதான் உண்டாகும்.

“ஏன்? பிரதமர் நேரு அவர்களாலும் ஆங்கிலத்தைக் கைவிட முடியாதுதான். அண்மையில் நடைபெற்ற ஆவடி மாநாட்டில் கூட, ‘சோஷலிசம்’ என்ற ஆங்கில வார்த்தைக்குச் சரியான இந்தி மொழி கிடைக்காமல் அவர் திணறினர். பக்கத்திலிருந்தத் தலைவர்களைக் கேட்டபோது, ஆளுக்கொரு வார்த்தையை வீசி எறிந்தனர்! தமிழ் மொழியில் இப்படிப்பட்ட திண்டாட்டம் ஏற்படுமா? தமிழ் மொழியில் சொல்லுக்குப் பஞ்சமா? ஒரு குறிப்பிட்டப் பொருளைக் கூறுவதற்குச் சொல் கிடையாத ஒரு மொழியை ஆட்சி மொழி என்று எப்படிக் கூறுவது? அதற்குஅத்தகுத்தகுதி இருக்கிறது என்பதை எப்படி ஒப்புவது? பிற மொழிச் சொல்லுக்கு நேரிடையான சொல்லற்ற ஒரு மொழியை, ஒரு நாட்டின் ஆட்சி மொழியாக்குவதைவிட வேறு கேவலம் எது?

“ஆங்கிலம் அயல் மொழிதான்; என்றாலும், புள்ளி விபரக் கணக்குப்படி, பட்டதாரிகளான 1000-க்கு 3 பேர் என்ற விகிதத்தினரே ஆங்கிலம் பயின்றிருந்த போதுங்கூட, ஆங்கில மொழியில் நிர்வாகம் ஒழுங்காகத்தான் நடைபெற்றிருக்கிறது. அத்தகுதியை ஆங்கிலம் பெற்றிருக்கிறது; ஆனால் இந்திக்கு அந்த அருகதை இல்லை

“ஆங்கிலம் அயல்நாட்டு மொழிதான்—நாமும் ஒப்புக்கொள்கிறோம். அதிகார முறையில்தான் ஆங்கிலத்தை நம் மீது வெள்ளையர் புகுத்தினர். ஆனாலும், அதனை நாம் பாராட்டத்தான் செய்கிறோம்.

“நம்முடைய எதிரி ஒருவன் வருகிறான்; மணம் கமழும் சந்தனத்தை நம்மீது வீசியெறிகிறான் என்றால், அதற்காக அவனை நாம் கோபித்துக்கொள்வதில்லை. எதிரியானாலும், வீசியெறிந்தது சந்தனமாயிற்றே! அதுபோலத்தான் அன்னியரான வெள்ளையர் நம்மீது ஆங்கிலத்தைத் திணித்தாலுங்கூட, அந்த ஆங்கில மொழி நமக்கு மிகுந்த பலன் தருகிற ஒன்றாக அல்லவா அமைந்துவிட்டது?

“அரசியல் விடுதலை கேட்பதற்கும், மொழி விடுதலை கேட்பதற்கும் வேற்றுமைகள் இருக்கத்தான் செய்கின்றன: என்றாலும், தமிழ் நாட்டின் வளப்பத்தைத் தடுக்கும் முறையில் அரசியலோ அல்லது மொழியோ குறுக்கே நின்றால் அதனை நாம் எதிர்க்காமலும் இருக்க முடியாததான்.

“நாம் ஆங்கில மொழி பயிலுகிறோம் என்றால், அது ஆங்கில மொழியின் நலனுக்காகவோ அல்லது ஆங்கிலேயருக்காகவோ பயிலவில்லை; மாறாக, நம்முடைய சொந்த நன்மைக்குத்தான் படிக்கிறோம். அகில உலகிற்கும் நம்மை வெளிப்படுத்துவதற்கும், தமிழ்க் களஞ்சியத்தை உருவாக்குவதற்கும் ஆங்கிலம் உதவுகிறது. நமக்குப் பயன் தருகிறது என்ற காரணத்தால் தான் ஆங்கிலத்தைப் படிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுகிறது. இந்தி மொழிப் பயிலுவதால் நமக்கு என்ன இலாபம்— என்ன பயன்? எதுவும் இல்லை.

“அப்படி எவ்விதமான பலனும் தராத ஒரு மொழி நம்மீது திணிக்கப்படுகிறதென்றால், அதனை நாம் எதிர்த்துப் போரிட்டுத்தான் ஆகவேண்டும். மறைமலை அடிகளார் கூறியதுபோல் நம் நாடு மொழி விடுதலை பெற வேண்டும். இதற்குப் புலவர் பெருமக்கள் அனைவரும் முன்வர வேண்டும். தாய் மொழிக்கு ஆபத்து — ஊறு நேரிடுகிற போது புலவர்கள் எதிர்த்துக் காப்பாற்ற வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களைப் புலவர்கள் என்று அழைப்பதில் அர்த்தமே இல்லை. ஏனெனில், புலவர்களது கடமையே மொழியைப் பாதுகாப்பதுதான். அதற்கு ஒரு எடுத்துக் காட்டாக மறைமலை அடிகளார் திகழ்ந்தார். கொண்ட கொள்கையிலே பிடிப்பும், பற்றும், உறுதியும் கொண்டவராக அவர் விளங்கினர்.

“மொழித் துறையில் மட்டுமல்லாமல், அடிகளார் அவர்கள் ஆராய்ச்சித் துறையிலும், வாழ்க்கைத் துறையிலும் நமக்கு எடுத்துக்காட்டாகவும் முன் மாதிரியாகவும் விளங்கினர். உண்மைத் தன்மையும், நல்ல நோக்கமும், பெருந்தன்மையும் உடையவராக இருந்து, ‘தமிழ் நாட்டவர் எந்நாட்டவருக்கும் தாழ்ந்தவர்களல்லர்’— என்ற அசைக்க இயலாத எண்ணமும் கொண்டு, தமிழுக்கும்— தமிழ் மக்களுக்குமே பெருந்தொண்டாற்றும் பெரியாராகத் திகழ்ந்தார்.

“தமிழ்ப் பெரியார் திரு வி. க அவர்களையும், அடிகளாரையும் ஒப்பிடும் போதும், தமிழுக்கெனத் தொண்டாற்றுவதில் முதன் முதலாகத் தம்மை அர்ப்பணித்தவர் அடிகளாரேயாவார்.

“அப்படிப்பட்ட சிறந்த தொண்டர்களைத் தமிழக மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் தான், அப்பெரியார்களது பெயர்களைத் தாங்கிய மன்றங்களும், நூல் நிலையங்களும் தோன்றுகின்றன.

“இன்றையத் தமிழகத்தில் பலர், தங்களது பெயர்களையும் சுத்தத் தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொள்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அதற்குக் காரணம் —அத்தகு ஒரு மொழிப்பற்றையும், விழிப்புணர்வையும் ஊட்டியவர் என்றால் அவர் மறைமலை அடிகளாரேதான்.

“அவர்கூட, ‘வேதாசலம்’ என்ற தமது பெயரைத் தமிழாக்கி ‘மறைமலை’ என்று மாற்றியமைத்துக்கொண்டார். இவ்வாறு அவர் செய்துகொண்டதால், அவரைப் ‘பார்ப்பன விரோதி; சமஸ்கிருத எதிரி; இவ்வாறு பெயர் மாற்றம் செய்துகொண்டதின் உள்நோக்கம் வகுப்புவாதம்,’—என்று சிலர் ஐயுறலாம் ஆனால், அவர் மட்டுமல்ல —தமிழ் மொழிப் பற்றுமிக்கவர்— சிறந்த பேராசிரியர்—ஆராய்ச்சித் துறையிலே சிறந்தவர்—பார்ப்பனக் குடும்பத்திலேயே பிறந்து வளர்ந்தவரான சூரியநாராயண சாஸ்திரியாரும்கூடத்தான் அழகான தமிழிலே ‘பரிதிமால் கலைஞன்’ என, தன் பெயரை மாற்றிக்கொண்டாரென்றால் அவரிடத்தில் பார்ப்பன விரோதமும், வகுப்புவாதமும் இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ள முடியுமா?”

தோழர் அன்பழகன் மேலும் பேசுகையில், வடநாட்டுச் சிவத்திற்கும்—தென்னாட்டுச் சிவத்திற்கும் உள்ள ஒன்றுக்கொன்று முரண்பட்ட நெறிகளை எடுத்துக் காட்டியவர் மறைமலை அடிகளே என்றும், ஒரே தெய்வ வழிபாட்டினையே மறைமலை அடிகளார் வற்புறுத்தி வந்திருக்கிறார் என்றும், பல தெய்வ வழிபாட்டினால் மேலும் மேலும் தெய்வங்களின் எண்ணிக்கை அதிகமாக வளர்ந்து கொண்டேதான் இருக்கும் என்றும், அடிகளாரது ஒரு தெய்வ வணக்கம் நாட்டில் பரவச் செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

கற்கால மனிதன் வாழ்ந்த காலம்!

அகமத்நகர், டிச 25—

கிறிஸ்து பிறப்பதற்கு 20,000 ஆண்டுகளுக்கு முன்னர், கற்கால மனிதன் தட்சிணத்தில் வாழ்ந்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

நர்மதை—துங்கபத்திரா ஆகியவற்றுக்கிடையே மேற்கொண்ட புதை பொருள் ஆராய்ச்சியில் தோண்டியெடுக்கப்பட்ட பல்வேறு கற்களைக்கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாம்

ஆரியர்களின் தென்னாட்டுக் குடியேற்றம் கி. மு. 4,000 அல்லது 5,000 ஆண்டிற்கிடையே ஏற்பட்டதென்றும், கி மு. 1,200 ஆண்டிற்கு முன் இரும்பு, இந்தியாவிற்கு அறிமுகம் ஆகியிருக்குமென்று நினைப்பதற்கு இயலவில்லையென்றும் அவ்வாராய்ச்சி மூலம் தெரியவருகிறதாம்.

சென்னை 8-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு

28—12—55 இரவு 9 மணிக்கு, சென்னை 8-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் (சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை, எண் 10, லாயர் சின்னதம்பி முதலி தெரு) நடைபெறும்.

சென்னை 43-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு

28-12-55 இரவு 8-30 மணிக்கு, சென்னை 43-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

தினசரி மாலை 6 மணி முதல் 8-30 மணி வரை, மீர்சாகிப்பேட்டை, வெங்கடாசல முதலி தெரு, 147-ம் எண்ணுள்ள கழகப் பணிமனையில் தி மு கழகப் புது உறுப்பினர்கள் பதிவு மேற்கொள்ளப்படுகிறது என்பது வட்டத்தில் வதியும் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திருக்குறள் வகுப்பு

28—12—55 மாலை 6 மணிக்கு, சென்னை—புரசைபாக்கம், எண் 100, வேளாளர் தெரு, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

நிகழ்ச்சிகள்

25—12—55 மாலை 6 மணியளவில் சென்னை—இராயபுரம் மறைமலை அடிகள் நாடக மன்ற நூல் நிலயத்தின் நான்காவது ஆண்டு விழாப் பொதுக் கூட்டம், மன்றக் கட்டிடத்தில், (எண் 40, மன்னார் சாமிகோயில் தெரு) நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் ஒ. இரா. கிருட்டிணமூர்த்தி தலைமை வகித்தார்.

தோழர்கள் க. அன்பழகன், ‘மலர்’ ஆசிரியர் வே. கபிலன், இராம-சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மன்றத் துணைச் செயலாளர் தோழர் வ. வில்லாளன் ஆண்டறிக்கை வாசித்தார்.

தோழர் அன்பழகன் அவர்களுக்கும், பிறருக்கும் மன்றச் சார்பில் மலர் மாலைகள் சூட்டப்பட்டன. இறுதியில் தலைவர் முடிவுரையுடனும் நன்றி நவிலலுடனும் கூட்டம் முடிவுற்றது. (ந.நி.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.